**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.**
**மேல்நிலை இரண்டாமாண்டு (+2) சிறப்பு துணைத் தேர்வு, ஜூன்–2019**
**தனித் தேர்வர்கள் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை இணையதளம் மூலம்**
**பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் தொடர்பான**

# செய்திக்குறிப்பு

நடைபெறவுள்ள ஜூன் 2019, மேல்நிலை இரண்டாமாண்டு (+2) சிறப்புத் துணைத் தேர்வெழுத அரசுத் தேர்வுத் துறையால் அறிவிக்கப்பட்ட நாட்களில் விண்ணப்பித்த அனைத்து தனித்தேர்வர்களும் (தட்கல் உட்பட) **29.05.2019 (புதன்கிழமை) பிற்பகல்** முதல் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தின் மூலம் **தேர்வுக் கூட நுழைவுச் சீட்டுகளை** பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஜூன் 2019 மேல்நிலை இரண்டாமாண்டு சிறப்புத் துணைத் தேர்விற்கு விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் www.dge.tn.gov.in என்ற இணையத்தளதிற்கு சென்று Hall Ticket என்ற வாசகத்தினை Click செய்ய வேண்டும். கீழ்க்குறிப்பிட்ட வகைத் தேர்வர்களுள் தாங்கள் எந்த வகையினை சார்ந்தவர் என்பதை பொறுத்து கீழ்க்காணும் வழிமுறைகளை பின்பற்றி Hall Ticket–ஐ பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

**பழைய நடைமுறையில் (மொத்த மதிப்பெண்கள் 1200) தேர்வு எழுதுவோர்:**

திரையில் தோன்றும் பக்கத்தில் HSE JUNE 2019 SECOND YEAR HALL TICKET DOWNLOAD (old pattern 1200 marks) என்ற வாசகத்தினை Click செய்ய வேண்டும்.

மார்ச் 2019, மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுத விண்ணப்பித்து தேர்ச்சி பெறாத / வருகை புரியாத தேர்வர்கள், மார்ச் 2019 பதிவெண் மற்றும் பிறந்த தேதியினை பதிவு செய்து தேர்வுக் கூட அனுமதிச் சீட்டினை பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

நேரடியாக ஜூன் 2019 தேர்விற்கு விண்ணப்பித்தோர் தமது விண்ணப்ப எண் (Application No.) மற்றும் பிறந்த தேதியினைப் (Date of Birth) பதிவு செய்து தேர்வுக் கூட அனுமதிச் சீட்டினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**புதிய நடைமுறையில் (மொத்த மதிப்பெண்கள் 600) தேர்வு எழுதுவோர்:**

திரையில் தோன்றும் பக்கத்தில் HSE JUNE 2019 SECOND YEAR HALL TICKET DOWNLOAD (New pattern 600 marks) என்ற வாசகத்தினைச் Click செய்ய வேண்டும்.

மார்ச் 2019, மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுத விண்ணப்பித்து தேர்ச்சி பெறாத / வருகை புரியாத தேர்வர்கள், மார்ச் 2019 பதிவெண் மற்றும் பிறந்த தேதியினை பதிவு செய்து தேர்வுக் கூட அனுமதிச் சீட்டினை பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

நேரடியாக ஜூன் 2019 தேர்விற்கு விண்ணப்பித்தோர் தமது விண்ணப்ப எண்(Application No.) மற்றும் பிறந்த தேதியினைப் (Date of Birth) பதிவு செய்து தேர்வுக் கூட அனுமதிச் சீட்டினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

..2..

பழைய நடைமுறையின்படி (மொத்தம் 1200 மதிப்பெண்கள்) தேர்வெழுதும் தனித்தேர்வர்களில் கேட்டல் / பேசுதல் திறன் தேர்வில் பங்கேற்காதோர் மட்டும் மொழிப் பாடங்களில் கேட்டல் / பேசுதல் திறன் தேர்விற்கு / சிறப்பு மொழி (தமிழ்) பாடத்தில் கேட்டல் / பேசுதல் திறன் தேர்விற்கு தேர்வு மையத்தின் முதன்மைக் கண்காணிப்பாளரை அணுகி அறிந்து கொள்ளலாம். மேலும், **செய்முறைத் தேர்வுக்கான தேதி குறித்த விவரத்தைத் தனித்தேர்வர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தேர்வு மையத்தின் முதன்மைக் கண்காணிப்பாளரை அணுகி அறிந்து கொள்ள வேண்டும்.**

உரிய தேர்வுக்கூட அனுமதிச் சீட்டின்றி எந்த ஒரு தேர்வரும் தேர்வெழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஜூன் 2019 சிறப்புத் துணைத் தேர்விற்கான தேர்வுக்கால அட்டவணையை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திற்கு சென்று அறிந்து கொள்ளலாம்.

**ஒம்./–**
**இயக்குநர்**

**நாள்: 28 .05.2019.**
**இடம்: சென்னை – 600 006.**